**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.**

**முன்னிலை :** செல்வி. சே.தா. ஆயிஷ் பேகம், பி.ஏ., பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, செய்யாறு.

2023ம் ஆண்டு ஜுலை மாதம் 17ம் நாள் திங்கள்கிழமை

**இடைக்கால மனு எண்.3/2023ன் அசல் வழக்கு எண். 25/2015**

மைனர் பிரவீன் குமார், வயது 6
(வாதி மைனர் ஆதலால் அவரது தாயாரும், கார்டியனும்,
சவரட்சணைக் கர்த்தாவுமான ராதா வயது 35 என்பவரால்
எடுத்துரைக்கப்படுகிறார்). ...மனுதாரர் /வாதி

/எதிர்/

ரவி, வயது 46 ...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு 12.07.2023ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஜி. நெடுஞ்செழியன், அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஜி.குணசேகரன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதத்தைக் கேட்டறிந்தும், கோப்புகளை பரிசீலனை செய்தும் இன்று, இதுகுறித்து இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 21ன் கீழ் சென்னை தடய அறிவியல் துறை உதவி இயக்குநர் அவர்களை மனுதாரர் தரப்பில் சாட்சியாக விசாரணை செய்யக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :-**

(i). மனுதாரர் மேற்படி தாவாவில் வாதியின் பாதுகாவலர். அவருக்காக இம்மனுவை தாக்கல் செய்கிறார். மேற்படி வழக்கில் மனுதாரரின் தாயாரை, எதிர்மனுதாரர்/பிரதிவாதி திருமணம் செய்து கொள்வதாக நம்பிக்கை கூறி தனி இடத்திற்கு வரவழைத்து அவரது விருப்பத்திற்கு மாறாக 24.10.2008 அன்று கற்பழித்துவிட்டார். அதன் பின்பும் மனுதாரரின் தாயாரை அதே இடத்திற்கு வரவழைத்து

உடலுறவு கொண்டார். எனவே மனுதாரரின் தாயார் கர்ப்பமாகி மேற்படி வழக்கின் மனுதாரர்/வாதி பிறந்தார். பின்னர் மனுதாரரின் தாயாரை திருமணம் செய்து கொள்ள மறுத்ததால் மனுதாரரின் தாயார் செய்யாறு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் செய்ததின்பேரில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது குற்ற எண்.3/2009ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டு பின்னர் குற்றப்பத்திரிக்கையும் தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது. இந்நிலையில் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் மனுதாரரின் தாயார் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 172/2009 என்ற வழக்கில் பல்வகை மனு எண் 55/2010 தாக்கல் செய்து மனுதாரர் மற்றும் பிரதிவாதிக்கு மரபணு பரிசோதனை நடத்த மனு தாக்கல் செய்திருந்தார். அந்த மனு 07.04.2011 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. அதன் பேரில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் குற்றவியல் மேல்முறையீட்டு மனு எண் 37/2013 தாக்கல் செய்தார். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் பிரதிவாதியை கட்டாயப்படுத்தி மரபணு சோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்று 10.02.2014 அன்று தீர்ப்பளித்தார்கள். இந்நிலையில் மனுதாரர், மனுதாரரின் தாயார் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர்களை மரபணு சோதனைக்கு உட்படுததி சென்னை தடய அறிவியல் துறை அலுவலகம் மூலம 26.09.2018 அன்று அறிக்கை அனுப்பப்பட்டது. அந்த அறிக்கையின் சான்றிட்ட நகல் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். எனவே அதன் அடிப்படையில் தடயவியல் அறிக்கை அளிக்க உதவி இயக்குநரை மனுதாரர் தரப்பில் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி இம்மனு தாக்கல்.

### 3. <u>எதிர்மனுதாரரின் எதிருரை சுருக்கம்</u>.

(i). மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது. இவ்வெதிர்மனுதாரரை கட்டாயப்படுத்தி மரபணு சோதனை மேற்கொள்ளப்பட்டது என்று மனுதாரர் கூறியுள்ளது தவறானது. எதிர்மனுதாரரின் விருப்பத்தின் பேரில் மரபணு சோதனை செய்து கொள்ளலாம் என்று உத்தரவிடப்பட்டிருந்தது. ஆனால் இவ்வெதிர்மனுதாரரின் விருப்பமின்றி தடயவியல் சோதனைக்கு உட்படுத்தி அறிக்கை பெறப்பட்டுள்ளது. அந்த அறிக்கை குறித்து சாட்சியம் எதுவும் பெறாமல் அறிக்கை உண்மைதானா என்று உரிய நீதிமன்றத்தின் மூலமாக எந்தவித விசாரணையும் மேற்கொள்ளாமல் அந்த அறிக்கை செல்லுமா, செல்லாதா என்று முடிவு செய்யாத நிலையில் விசாரணை நிலுவையில் உள்ள நீதிமன்றத்தில் பகுப்பாய்வு நிபுணரின் மூலமாக சாட்சியமும், சான்றும் அளிக்கப்படாத ஆவணத்தின் நகலை எதிர்மனுதாரரின் அனுமதியின்றி பெற்று தாக்கல் செய்துள்ளது

நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே இவ்வெதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. மனுதாரரின் மனு எதிர்மனுதாரரின் எதிருரை ஆகியவற்றைப் பரிசீலனை செய்ததில் இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்?

5. மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் இத்தாவாவை இளவர் பிரவீன்குமார் என்பவர் எதிர்மனுதாரரின் மகன் என விளம்புகை கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர், மனுதாரரின் தாய் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர்களுக்கு குற்றவியல் நீதிமன்றம் உத்தரவின் பேரில் மரபணு பரிசோதனை செய்யப்பட்டதாகவும், மேற்படி பரிசோதனையின் அறிக்கை சான்றிட்ட நகலை மனுதாரர் தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி ஆவணத்தை நிரூபணம் செய்ய வேண்டிய அவசியம் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ளதாகவும், எனவே மேற்படி மரபணு பரிசோதனை அறிக்கை அளித்த உதவி இயக்குநர், தடயவியல் துறையை இவ்வழக்கில் மனுதாரர் தரப்பில் சாட்சியமாக அழைத்து விசாரிக்க உத்தரவிட வேண்டும் என்றும், மேற்படி அவருக்கு நீதிமன்றத்தின் மூலம் சாட்சிய அழைப்பாணை வழங்கக் கோரியும் இம்மனு தாக்கல் செய்துள்ளதாகவும், இம்மனு அனுமதிக்கப்படவில்லை எனில் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்றும், எனவே இம்மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

6. கற்றறிந்த எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் மனுதாரர் தரப்பில் தற்போது தாக்கல் செய்துள்ள ஆவணம் சாட்சியம் அளிக்கப்படாத ஆவணமாக உள்ளது என்றும், இவ்வெதிர்மனுதாரரின் அனுமதியின்றி சான்று அளிக்கப்படாத ஆவணத்தின் நகல் தாக்கல் செய்துள்ளதாகவும், மேலும் குற்ற வழக்கில் நீதித்துறை நடுவர் உத்தரவின் பேரில் மரபணு பரிசோதனை குறித்த அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த அறிக்கை குறித்து மேற்படி வழக்கில் எந்தவிதமான சாட்சியமும் அளிக்கப்படவில்லை என்றும், அந்த அறிக்கையின் உண்மைத் தன்மை இன்னும் நிரூபணம் செய்யப்படாத நிலையில் இந்நீதிமன்றத்தில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே இம்மனுவினை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

7. **தீர்வு :-**

(i). இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு, மனு, எதிருரை மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், மனுதாரர் தரப்பில் இவ்வழக்கில் உதவி இயக்குநர், தடய அறிவியல் துறை, சென்னை என்பவரை இவ்வழக்கில் மனுதாரர் தரப்பு சாட்சியாக விசாரிக்க அனுமதி அளிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் மரபணு பரிசோதனை அறிக்கை குறித்த சாட்சியம் எதுவும் விசாரிக்கப்படாமல் உள்ளதாகவும், எனவே இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் கூறப்பட்டுள்ளது. பொதுவாக ஒரு வழக்கை தாக்கல் செய்யும் வாதியே அவ்வழக்கை நிரூபணம் செய்ய கடமைப்பட்டவராகிறார். இவ்வழக்கில் மனுதாரர் தன்னை எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் மகன் என விளம்புகை செய்யக்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். அதை நிரூபணம் செய்ய மனுதாரர், அவரது தாயார் மற்றும் எதிர்மனுதாரருக்கு மரபணு பரிசோதனை செய்யப்பட்டு அதற்கான அறிக்கை அளிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த அறிக்கையின் நீதிமன்ற சான்றிட்ட நகல் மாண்புமிகு திருவண்ணாமலை மாவட்ட நீதிமன்றத்தால் அமர்வு நீதிமன்ற வழக்கு எண் 55/2019 என்ற வழக்கில் வழங்கப்பட்டுள்ளது.

(ii). மேற்படி எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணம் நீதிமன்றத்தால் வழங்கப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது. ஆவணத்தை ஆராய்கையில் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள நீதிமன்ற சான்றிட்ட நகலாகவே காணப்படுகிறது. மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் குற்ற வழக்கில் மேற்படி ஆவணம் குறித்து சாட்சியம் அளிக்கப்படாத நிலையில் இம்மனு இந்நீதிமன்றத்தில் நிலைக்கத்தக்கதல்ல என்று கூறப்பட்டுள்ளது. குற்ற வழக்குகள் மற்றும் உரிமையியல் வழக்குகள் விசாரணை வெவ்வேறானது. மேலும் இவ்வழக்கில் வாதி தன்னுடைய தரப்பை நிரூபணம் செய்ய வேண்டிய நிலையில் உள்ளதால் அவருக்கு அதற்கான வாய்ப்பு அளிக்க வேண்டும். மேலும் இம்மனு அனுமதிக்கப்பட்டால் எதிர்மனுதாரருக்கு எவ்விதமான கஷ்ட நஷ்டங்களும் இல்லை. சாட்சியை மரபணு பரிசோதனை அறிக்கை குறித்து முழுமையாக குறுக்கு விசாரணை செய்வதற்கு வாய்ப்பு உள்ளது. மாறாக தள்ளுபடி செய்யப்பட்டால் மனுதாரருக்கே பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட வாய்ப்பு அதிகம் உள்ளது. எனவே முதல் நோக்கு மனு மனுதாரருக்கு உள்ளது. எனவே நீதியின் நலன்பால் இம்மனு அனுமதிக்க உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. மனுவின் தன்மை மற்றும் உபயதரப்பினர்களின் உறவுமுறையை கருத்தில் கொண்டு மனுவின் செலவுத் தொகையை அவரவர்களே ஏற்க வேண்டியது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவாக,** இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இவை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு ஜுலை மாதம் 17ம் நாளான இன்று இந்நீதிமன்ற அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

(ஒம்). சே.தா. ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>**

இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>**

இல்லை

(ஒம்). சே.தா. ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.